03.02.2026

**E.P.No.51/2022 in O.S.NO.213/2013**

எ.ம.சா.2 சரோஜா குறுக்கு விசாரணை

1. என்னை சாட்சியம் அளிக்க 1ம் எதிர்மனுதாரர்தான் அழைத்து வந்தார். 1ம் எதிர்மனுதாருக்கு நான் அத்தை உறவா என்றால் பக்கத்து வீட்டுகாரர் ஆவார். எனது அப்பா பெயர் முனுசாமி. எனது பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் படித்து பார்த்தேனா என்றால் இல்லை. பிரமாணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞர் தயார் செய்தார் அதை படித்து காட்டினார். மனுதாரர் கஸ்தூரியை தெரியுமா என்றால் தெரியும். மனுதாரர் கஸ்தூரி என்ன பரிகாரம் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் கஸ்தூரி ஏற்கனவே தாக்கல் செய்த அசல் வழக்கை பற்றி தெரியுமா என்றால் தாக்கல் செய்த விவரம் தெரியும். மேற்சொன்ன அசல் வழக்கு மனுதாரர் கஸ்தூரிக்கு சார்பாக தீர்ப்பானது என்றால் சரிதான்.

2. தாவாசொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள சர்வே எண்.423/1 மனு சொத்தின் சர்வே எண் கிடையாது என்றால் சரியல்ல. தாவாசொத்தின் சர்வே எண்.423/16 எனவே இந்த வழக்கின் விவரம் தெரியாமல் எனது பிரமாணவாக்குமூலத்தில் தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாசொத்திற்கு பக்கத்து தெருவில்தான் நான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் 1ம் எதிர்மனுதாரருக்கு பிரச்சனை ஏற்பட்ட போது நான் அருகில் இருந்தேனா என்றால் இல்லை. நான்

காவல்நிலையத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் உடன் சென்றேனா என்றால் இல்லை. மனுதாரருக்கும் 1ம் எதிர்மனுதாரருக்கும் நில அளவீடு செய்யும்போது என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது.

3. எனது பிரமாணவாக்குமூலத்தில் மனுதாரர் கஸ்தூரி அடிக்கடி சண்டை போடுவார் என்று கூறியுள்ளேன் அது எப்போது நடந்தது என்றால் அதை பற்றி தெரியாது, ஆனால் அடிக்கடி சண்டை போடுவார். எதற்காக சண்டை போடுவார் என்றால் தாவாசொத்திற்கு சம்பந்தமாகதான் சண்டை ஏற்பட்டது, மனுதாரர் போலி பட்டா வாங்கி வைத்துள்ளார். மேற்சொன்ன போலி பட்டாவை பார்த்துள்ளேனா என்றால் இல்லை, ஊரில் சொல்லிதான் கேள்விபட்டேன், அதில் உள்ள சர்வே எண்கள் தெரியாது. பட்டாவின் அடிப்படையில்தான் மேற்சொன்ன அசல் வழக்கு மனுதாரருக்கு சார்பாக தீர்ப்பாகியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

4. எனக்கு வழக்கு பற்றிய விவரங்களும், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரருக்கும் ஏற்பட்ட பிரச்சினை பற்றி தெரியாது, நான் எதிர்மனுதாரர் உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன், அதனால் என் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.